இஸ்ரவேலின் சார்பாக அறிக்கை

எரேமியா 31:10ஆ

இஸ்ரவேலைச் சிதறடித்தவர் அதைச்
சேர்த்துக்கொண்டு, ஒரு மேய்ப்பன் தன் மந்தையைக்
காக்கும்வண்ணமாக அதைக் காப்பார்.[1]

சங்கீதம் 129:5-6

சீயோனைப் பகைக்கிற அனைவரும்
வெட்கிப் பின்னிட்டுத் திரும்பக்கடவர்கள். வீட்டின்மேல்
முளைக்கும் புல்லுக்கு அவர்கள் ஒப்பாவார்களாக;
அது வளருமுன் உலர்ந்துபோம்.

சங்கீதம் 55:9அ

ஆண்டவரே, அவர்களை அழித்து,
அவர்கள் பாஷையைப் பிரிந்துபோகப்பண்ணும்!

சங்கீதம் 125:3அ

ஆகாமியத்தின் கொடுங்கோல் நீதிமான்களுடைய
சுதந்தரத்தின்மேல் நிலைத்திராது...

1 சாமுவேல் 12:22

கர்த்தர் உங்களைத் தமக்கு ஜனமாக்கிக்கொள்ளப்
பிரியமானபடியினால், கர்த்தர் தம்முடைய மகத்துவமான
நாமத்தினிமித்தம் தமது ஜனத்தைக் கைவிடமாட்டார்.

சங்கீதம் 33:8-12

பூமியெல்லாம் கர்த்தருக்குப் பயப்படுவதாக; உலகத்திலுள்ள
குடிகளெல்லாம் அவருக்கு அஞ்சியிருப்பதாக.
அவர் சொல்ல ஆகும் அவர் கட்டளையிட நிற்கும்.
கர்த்தர் ஜாதிகளின் ஆலோசனையை விருதாவாக்கி,
ஜனங்களுடைய நினைவுகளை அவமாக்குகிறார்.
கர்த்தருடைய ஆலோசனை நித்தியகாலமாகவும்,
அவருடைய இருதயத்தின் நினைவுகள் தலைமுறை
தலைமுறையாகவும் நிற்கும். கர்த்தரைத் தங்களுக்குத்
தெய்வமாகக்கொண்ட ஜாதியும், அவர் தமக்குச்
சுதந்தரமாகத் தெரிந்துகொண்ட ஜனமும் பாக்கியமுள்ளது.

சங்கீதம் 17:7-9

உம்மை நம்புகிறவர்களை அவர்களுக்கு விரோதமாய்
எழும்புகிறவர்களினின்று உமது வலதுகரத்தினால் தப்புவித்து
இரட்சிக்கிறவரே! உம்முடைய அதிசயமான கிருபையை
விளங்கப்பண்ணும். கண்மணியைப்போல என்னைக் காத்தருளும்.
என்னை ஒடுக்குகிற துன்மார்க்கருக்கும்,
என்னைச் சூழ்ந்துகொள்ளுகிற என் பிராணப்பகைஞருக்கும்
மறைவாக, உம்முடைய செட்டைகளின் நிழலிலே
என்னைக் காப்பாற்றும்.

சங்கீதம் 124

மனுஷர் நமக்கு விரோதமாய் எழும்பினபோது, கர்த்தர் நமது
பக்கத்திலிராவிட்டால், கர்த்தர் தாமே நமது பக்கத்திலிராவிட்டால்,
அவர்கள் கோபம் நம்மேல் எரிகையில், நம்மை உயிரோடே
விழுங்கியிருப்பார்கள். அப்பொழுது தண்ணீர்கள் நம்மேல்
பாய்ந்து, வெள்ளங்கள் நமது ஆத்துமாவின்மேல் பெருகி,
கொந்தளிக்கும் ஜலங்கள் நமது ஆத்துமாவின்மேல்
புரண்டுபோயிருக்கும் என்று இஸ்ரவேல் இப்பொழுது
சொல்வதாக. நம்மை அவர்களுடைய பற்களுக்கு இரையாக
ஒப்புக்கொடாதிருக்கிற கர்த்தருக்கு ஸ்தோத்திரம். வேடருடைய
கண்ணிக்குத் தப்பின குருவியைப்போல நம்முடைய ஆத்துமா
தப்பிற்று, கண்ணி தெறித்தது, நாம் தப்பினோம்.

நம்முடைய சகாயம் வானத்தையும் பூமியையும் உண்டாக்கின
கர்த்தருடைய நாமத்தில் உள்ளது.

For more copies of this bookmark please contact a Derek Prince Ministries office below.

DPM-India (English)
admin@derekprince.in
derekprince.com/en-in

DPM-India (Tamil)
admin@derekprince.in
www.derekprince.com/ta

DPM-Asia/Pacific
enquiries@dpm.co.nz
www.derekprince.com/en-nz

DPM-Australia
enquiries@au.derekprince.com
www.derekprince.com.au